# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**OS.No. 181/2021**

**நாள்– 27.01.2025**

**வா.சா.1 திரு. மைக்கேல் –** சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் குருவிகுளத்தில் வசித்து வருகிறேன். நான் 40 வருடங்களாக தீப்பெட்டி உற்பத்தி தொழில் செய்து வருகிறேன் என்றால் சரிதான். குருவிகுளம், அத்திப்பட்டி, இராமலிங்கபுரம் ஆகிய ஊர்களில் எனக்கு சொந்தமான தீப்பெட்டி தொழிற்சாலைகள் உள்ளன என்றால் சரிதான். எனக்கு 3 பிள்ளைகள். ஆரோக்கியராஜ், அமல்ராஜ் மற்றும் மேரி ஆகியோர் எனது பிள்ளைகள் ஆவார்கள். அமல்ராஜ், ஆரோக்கியராஜ், ராஜ், அமலி, மாதா, லாசா ஆகிய பெயர்களில் நிறுவனங்கள் நடத்திவருகிறேன் என்றால் சரிதான். பிரதிவாதி ஜான்பிரபுவை எனது சிறு வயது முதல் தெரியும் என்றால் சரிதான். ஜான் பிரபுவின் தகப்பனாரும் நானும் நண்பர்கள் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு கழுகுமலையில் சொந்தமான நஞ்செய், புன்செய் நிலங்கள் மற்றும் சொந்த வீடு உள்ளன என்றால் சரிதான். பிரதிவாதிக்கு சொந்தமான திருமண மண்டபம் கழுகுமலையின் மையப்பகுதியில் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியின் குடும்பத்தினரும் வசதியானவர்கள் என்றால் சரிதான். பிரதிவாதியும் அவரது அப்பாவின் காலத்திலிருந்தே திப்பெட்டி தொழில் செய்து வருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதியின் குடும்பத்தினர் நிர்மலா மேட்ச் இன்டஸ்ட்ரீஸ் மற்றும் நிர்மலா மேட்ச் என்டர்பிரைசஸ் என்ற பெயரில் தொழிற்சாலைகள் நடத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். ஜான்பிரபுவின் அக்கா பெயரும் நிர்மலா மற்றும் ஜான்பிரபுவின் மனைவியின் பெயரும் நிர்மலா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

பிரதிவாதியின் குடும்பத்தினர் தங்கயானை என்ற பெயரில் தீப்பெட்டி தயார் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு சொந்தமான திருமண மண்டபத்தின் பெயரும் தங்க யானை என்றால் சரிதான். பிரதிவாதியின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட நிர்மலா மேட்ச் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தை முதலில் பிரதிவாதியின்

தகப்பனாரும், பின்னர் அவரது சகோதரரும், அதன் பின்னர் பிரதிவாதியும் நிர்வகித்து வருகின்றனர் என்றால் சரிதான்.

எங்கள் தீப்பெட்டி தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் தீப்பெட்டிகளில் அவரது தங்க யானை பிராண்ட் ஸ்டிக்கரை ஒட்டி வெளியூரில் அவர் வியாபாரம் செய்வார் என்றால் சரிதான். எங்கள் தொழிற்சாலையில் இருந்தே தீப்பெட்டிகளை பிரதிவாதி பிராண்ட் பெயரில் வாகனங்களில் ஏற்றி வெளி மாநிலங்களுக்கு விற்பனைக்கு அனுப்புவது வழக்கம் என்றால் சரிதான். பிரதிவாதிக்கும் எனக்கும் இடையே நேரடியாக வர்த்தகம் கடந்த 10 வருடங்களாக நடைபெற்றது என்றால் சரியல்ல, 5 வருடங்கள் நடைபெற்றது. அந்த 5 வருடங்களில் எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே சுமார் 20 கோடி ரூபாய் அளவில் பற்று வரவு நடைபெற்றது என்றால் 3 கோடி அளவில் நடைபெற்றது. எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே நடந்த தொழில் வர்த்தகத்தில் காசோலைகள் மூலமாகவும் பரிவர்த்தனைகள் செய்யப்படும் என்றால் சரிதான். அந்த 5 வருட காலத்தில் சுமார் 80 காசோலைகளை பிரதிவாதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல, 40 காசோலைகள் கொடுத்திருப்பார். பிரதிவாதி கொடுத்த காசோலைகள் அனைத்தும் வசூலாகிவிட்டன என்றால் சரிதான்.

எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தமிழ் எழுத படிக்க தெரியும். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்னர் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பு தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் பிரதிவாதி என்னுடன் செய்துவந்த தீப்பெட்டி தொழில் வியாபாரம் சம்பந்தமாக எனக்கு 15 லட்ச ரூபாய் செலுத்தவேண்டும் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பான வா.சா.ஆ. 5 ன் அடிப்படையில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி என்னுடன் செய்துவந்த தீப்பெட்டி தொழில் வியாபாரம் சம்பந்தமாக ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது நிறுவனத்தின் பற்று – வரவு கணக்குகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால், பிரதிவாதி எனக்கு செலுத்தவேண்டிய தொகை எவ்வளவு என்பது தெரியவரும் என்றால் நிறுவனமே மூடப்பட்டுவிட்டது, அதனால் கணக்கு வழக்குகளை தாக்கல் செய்ய இயலாது. அது சம்பந்தப்பட்ட கணக்கு வழக்குகள் என் வசம் இல்லை.

நான் விற்பனை வரி மற்றும் வருமான வரி ஆகியவற்றை செலுத்துகிறேன் என்றால் சரிதான். விற்பனை வரி மற்றும் விற்பனை வரி கணக்குகளை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் பிரதிவாதியுடன் எனக்கு இருந்த பற்று – வரவு எவ்வளவு என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான்.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi